**O.S.No. 235/2018**

**Date 27.01.2025**

**வா.சா.1 காளியம்மாள்**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பிரதிவாதியிடம் இருந்து தாவா சொத்தை கிரையம் பெற்று அனுபவித்து வருவதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு தாவா சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் அதுகுறித்து தெரியாது. பிரதிவாதிக்கு தாவா சொத்து ஆதிதிராவிடர் நலத்துறையால் இலவசமாக கொடுக்கப்பட்ட வீட்டு மனை என்றால் சரிதான். நான் கிரையம்பெறுவதற்கு முன்பு பிரதிவாதிக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பட்டாவை பார்த்துள்ளேன் என்றால் பட்டாவை பார்க்கவில்லை. 1ம் பிரதிவாதிக்கு 1996ம் வருடம் அரசாங்கத்தால் தாவா சொத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுகுறித்துதெரியாது. மேற்படி பட்டாவில் யாருக்கும் 30 வருடத்திற்கு விற்பனை செய்ய கூடாது என்று நிபந்தனை உள்ளது என்றால் அதுகுறித்து தெரியாது. வழக்குரையில் பிரதிவாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதாக தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களின் சுற்றியுள்ள இடங்கள் அனைத்தும் காலனி வீடுகள் என்றால் சரிதான். பிரதிவாதியிடம் இருந்து நான் கிரையம் பெறும் பொழுது எந்த கட்டிடங்களும் இல்லை என்றால் சரிதான். தாவா இடத்தில் தற்காலிகமாக தகர செட் அமைத்து பஞ்சாயத்தில் தீர்வை செலுத்தி கதவு எண் பெற்றுக்கொண்டேன் என்றால் நான் அதில் தான் குடியிருந்து வருகிறேன். நான் தாவா சொத்தில் குடியிருந்து வரவில்லை என்றாலும், தற்காலிகமாக தகரசெட் அமைத்து தீர்வை செலுத்தி கதவு எண் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ–2 ஆவணம் பஞ்சாயத்தை ஏமாற்றி மோசமாக பெற்றுக்கொண்ட ஆவணம் என்றாலும் அது செல்லத்தக்கதில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.2 யை அடிப்படையாக கொண்டு தான் வா.சா.ஆ.3 ஆவணத்தை பெற்றுக்கொண்ட ஆவணம் செல்லத்தக்கதில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதியிடம் இருந்து 2009ம் ஆண்டு கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியும். பிரதிவாதி பொன்னம்மாளுக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான்.

பிரதிவாதி தாவா சொத்தை 30 ஆண்டுகளுக்குள் விற்பனை செய்ய கூடாது என்ற நிபந்தனையை அறியாமல் படிப்பறிவு இல்லாத காரணத்தினால் உங்களுக்கு தவறுதலாக கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அரசாங்கத்திடம் இருந்த பெற்ற மேற்படி இடத்தை விற்றதற்கு நடவடிக்கை எடுப்பதாக எச்சரித்தனர் என்றால் சரியல்ல. அரசாங்கம் எச்சரிக்கை விடுத்தவுடன் 22.03.2012 தேதியில் நானும் பிரதிவாதியும் சேர்ந்து 2009ம் வருடம் ஏற்படுத்தி கொண்ட கிரைய ஆவணத்தை இரண்டுபேரும் மனமொத்து ஆவண எண். 1178/2012 ஆவணத்தின் கீழ் ரத்து செய்து ரத்து ஆவணம் பிறப்பித்து கொண்டோம் என்றால் சரியல்ல. 2009ம் ஆண்டு கிரையத்தை ரத்து செய்து பிறப்பித்த ஆவணத்தின் அடிப்படையில் என் பெயரில் ஏற்பட்ட தீர்வை ரசீதுகளை ரத்து செய்துவிட்டனர் என்றால் சரியல்ல. வழக்கிற்கு பின்னிட்டு எந்த தீர்வை ரசீதுகளும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்தவித தகர செட்டும்கிடையாது என்றால் சரியல்ல. எனக்கு கொடுத்த கிரையத்தை பிரதிவாதி ரத்து செய்த தேதி முதல் தாவாசொத்து பிரதிவாதி அனுபவத்தில் இருந்து வருகீறது என்றால் சரியல்ல. நானும் பிரதிவாதியும் சேர்ந்து பிறப்பித்த ரத்து ஆவணத்தை வேண்டுமென்றே நீதிமன்றத்தில் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. இன்றைய தேதியில் தீர்வை ரசீதுகளை பிரதிவாதி பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தில் நீங்கள் குடியிருந்து வருவதற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீங்களும் பிரதிவாதியும் சேர்ந்து பிறப்பித்து கொண்ட ரத்து ஆவணத்தில் தாவா சொத்து காலி மனையாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2009 தேதிய கிரையத்தை ரத்து செய்த போது கிரைய தொகையை நான் பிரதிவாதியிடம் இருந்து பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியும் நானும் ஏற்படுத்தி கொண்ட கிரையத்தை மனமொத்து ரத்து செய்து கொண்ட காரணத்தினால் இவ்வழக்கை தாக்கல் செய்ய உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மவி இல்லை.